தேசிய மொழித் தகைமை (NLQ) மதிப்பீட்டுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறை

- 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் 05:01 ஆம் பந்தியின் பிரகாரம் இப் பரீட்சையை அரசகரும மொழிகள் திணைக்களம் வருடாந்தம் நடாத்துதல் வேண்டும். இதன் போது அதிக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு இப் பரீட்சையானது காலாண்டிற்கு ஒரு தடவை என்றவாறு வருடத்திற்கு அதிகபட்சமாக நான்கு தடவைகள் (04) நடாத்தப்படும்.

- பரீட்சைக்கான விண்ணப்பங் கோரல் அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்பட மாட்டாது. அத்தோடு அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk இணையத்தளம் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

- தேசிய மொழித் தகைமை (NLQ) மதிப்பீட்டுப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 3000.00 ஆகும். பரீட்சையில் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை நாட்டிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் “இலங்கை வங்கி, ராஜகிரிய, அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் 7041541 எனும் கணக்கிலக்கத்திற்கு” வரவு வைத்தல் வேண்டும். அத்தோடு பணம் செலுத்தகையில் வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில் அதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் “NLQ EXAM” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் போது பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை ஸ்கேன் செய்து அல்லது புகைப்படம் எடுத்து ஓர் இணைப்பாக விண்ணப்பத்தோடு இணைத்தல் வேண்டுமென்பதோடு, பரீட்சையின் போது அதனை பரீட்சை அனுமதிப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- பரீட்சைக்கானப் பணத்தை செலுத்திய பின்னரோ விண்ணப்பித்த பின்னரோ அப் பணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

- விண்ணப்பதாரி அரச உத்தியோகத்தர் ஆயின், நிறுவனத் தலைவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு ஏனைய விண்ணப்பதாரிகள் சமாதான நீதவான் / அரச பாடசாலையொன்றின் அதிபர்/ பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஊடாக தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

- தேசிய மொழித் தகைமை (NLQ) மதிப்பீட்டுப் பரீட்சையானது நாடளாவிய ரீதியில் மாகாண மட்டத்தில் ஒழுங்கமைக்கப்படும். இருப்பினும் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நிலையமொன்றில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானளவு இல்லை எனத் தீர்மானிப்படுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் அண்மித்த மாகாணம் அல்லது மேல் மாகாணப் பரீட்சை நிலையத்திற்கு

நாட்டில் எந்தவொரு பிரதேசத்தினதும் விண்ணப்பதாரிகளை அழைப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

- பரீட்சைக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சை குறித்த தகவல்கள் மற்றும் மாதிரி வினாக்கள் உள்ளடங்கிய புத்தகம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.